

புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் வட்டம், மெய்வழிச் சாலை, ஆர்ச் அருகில் ஏற்பட்டுள்ள தீ விபத்தால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகள் மற்றும் வீடுகளை, இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. மு.அருணா, தலைமையில் 01.07.2025 அன்று நேரில் பார்வையிட்டார். உடன், இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் அ.அக்பர் அலி மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

## முதலமைச்சர் காணொலி மூலம் திறந்து வைத்தார்!

# அரியலூரில் புதிய சேமிப்புக் கிடங்கு கட்டிடம்!

### அமைச்சர் சா.சி.சிவசங்கர் பங்கேற்பு!

அரியலூர்,ஜூலை, 8-

முதலமைச்சர் அவர்கள், சென்னை, தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக வேளாண்மை உழவர் நலத்துறையின் சார்பில் அரியலூர் மாவட்டத்தில் கட்டப்பட்டுள்ள ஆண்டிமடம் சேமிப்புக் கிடங்கு, தா.பழூர் ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையம் மற்றும் விக்கிரமங்கலம் துணை வேளாண் விரிவாக்க மையத்தினை 04.07.2025 அன்று திறந்து வைத்தார். தா.பழூர் ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையத்தில் நடைபெற்ற இவ்விழாவில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கலந்து கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா ஆகியோர் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் அவர்கள் சென்னை தலைமைச் செயலகத்தில் வேளாண்மை - உழவர் நலத் துறையின் சார்பில் "ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம்" என்ற புதிய திட்டத்தை தொடங்கி வைத்து, 5 பயனாளிகளுக்கு காய்கறி விதைத்தொகுப்புகள், பழச்செடித் தொகுப்புகள் மற்றும் பயறு வகைத் தொகுப்புகளை வழங்கினார். மேலும், 103 கோடியே 38 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 2 முதன்மை பதப்படுத்தும் மையங்கள், 18 சேமிப்புக் கிடங்குகள், 3 வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், 3 வேளாண் சந்தை நுண்ணறிவு ஆலோசனை மையங்கள், 8 ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையங்கள், 10 துணை வேளாண் விரிவாக்க மையங்கள், 2 விதை சேமிப்புக் கிடங்குகள், உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகம், 2 ஒருங்கிணைந்த விதைச்சான்று வளாகங்கள், அலுவலகக் கட்டடம், மாணவர் விடுதி மற்றும் தரக்கட்டுப்பாடு ஃ பகுப்பாய்வகம் உள்ளிட்ட 52 கட்டடங்களை திறந்து வைத்தார்கள்.

அதன்படி வேளாண்மை - உழவர் நலத்துறையின் சார்பில் அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் வட்டாரத்தில் ரூ.1 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஆண்டிமடம் சேமிப்பு கிடங்கு, ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தா.பழூர் ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையம் மற்றும் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள விக்கிரமங்கலம் துணை வேளாண் விரிவாக்க மையத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்கள். அதனைத் தொடர்ந்து தா.பழூர் ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் குத்து விளக்கேற்றி வைத்துப் பார்வையிட்டார்.

தொடர்ந்து, காய்கறிகள், பழங்கள், பயறு வகைகள், சிறுதானியங்களின் உற்பத்தி அதிகரித்து ஊட்டச்சத்து பாதுகாப்பினை உறுதி செய்வதுடன் உழவர்களின் வருமானத்தை உயர்த்தும் வகையில் ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம் முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டதை தொடர்ந்து, தா.பழூர் ஊராட்சியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கத்தினை தொடங்கி வைத்து பயனாளிகளுக்கு காய்கறி விதைத்தொகுப்புகள், பழச்செடித் தொகுப்புகள் மற்றும் பயறு வகைத் தொகுப்புகளை வழங்கினார்.

மேலும் அரியலூர் மாவட்டத்தில் அரியலூர் வட்டாரம் அஸ்தினாபுரம் ஊராட்சியிலும், செந்துறை வட்டாரம் செந்துறை ஊராட்சியிலும், திருமானூர் வட்டாரம் கோவில் எசனை ஊராட்சியிலும், ஜெயங்கொண்டம் வட்டாரம் தத்தனூர் மேற்கு ஊராட்சியிலும், ஆண்டிமடம் வட்டாரம் விளந்தை ஊராட்சியிலும், தா.பழூர் வட்டாரம் தா.பழூர் ஊராட்சியிலும் இன்றையதினம் ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம் விழா நடைபெற்றது.

மேலும், வேளாண்மை ஊட்டச்சத்து இயக்கத்தின் மூலம் அரியலூர் மாவட்டத்தில் வேளாண்மை துறை வாயிலாக துவரை - 5 கிராம், தட்டைப் பயிறு -10 கிராம், அவரை -10 கிராம் கொண்ட பயறு வகை விதை தொகுப்பு 3,000 எண்கள் மானியத்தில் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. தோட்டக்கலைத் துறை வாயிலாக ரூ.60/- மதிப்பிலான காய்கறி விதை தொகுப்பு (தக்காளி, கத்தரி, மிளகாய், வெண்டை, கீரை மற்றும் கொத்த அவரை) 100 சதவீதம் மானியத்தில் மொத்தம் 23,000 காய்கறி விதை தொகுப்புகள் மானியத்தில் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதேபோன்று ரூ.100/- மதிப்பிலான (பப்பாளி, கொய்யா மற்றும் எலுமிச்சை) பழச்செடிகள் தொகுப்பு 100 சதவீத மானிய விலையில் மொத்தம் 14,100 எண்கள் பழச்செடிகள் தொகுப்புகள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. எனவே, அரியலூர் மாவட்ட விவசாயிகள் இத்திட்டத்தில் கீழ் tnhorticulture.gov.in/kit/ என்ற இணையதளத்தில் அல்லது உழவர் செயலியில் அல்லது தங்கள் பகுதி வேளாண்மை உதவி இயக்குநர் மற்றும் தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகத்தில் பதிவு செய்து பயன்பெறலாம்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் முனைவர்.ஆ.ரா.சிவராமன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) ராதாகிருஷ்ணன், தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் பாலமுருகன், உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர் ஷீஜா, வேளாண்மைத் துறை உதவி இயக்குநர்கள் சாந்தி, தமிழ்மணி, ஜெயங்கொண்டம் வட்டாட்சியர் திரு.சம்பத்குமார், இதர அரசு அலுவலர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.




கோவை மாநகர் மாவட்டக் கழகத்தின் சார்பில் பீளமேடுபுதூர், துரை தேவராசன் திடலில், "ஓரணியில் தமிழ்நாடு எனும் கழக உறுப்பினர் சேர்க்கும் முன்னெடுப்பு பிரச்சார பொதுக்கூட்டம் மாநகர் மாவட்டச் செயலாளர், நா.கார்த்திக் தலைமையில், இரா.மணிகண்டன் வரவேற்புரையில் கோட்டை அப்பாஸ், தளபதி இளங்கோ, கல்பனா செந்தில், எஸ்எம்பி.முருகன், துரை. செந்தமிழ்ச் செல்வன், இலக்குமி இளஞ்செல்வி கார்த்திக், கி.நாராயணன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக செய்தி மக்கள் தொடர்பு பிரிவு துணைத்தலைவர் ஆண்டாள் பிரியதர்ஷினி சிறப்புரையாற்றினார். இதில் பலர் கலந்து கொண்டனர்.

---

## முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலில் நடைபெறும் "ஓரணியில் தமிழ்நாடு" பரப்புரை திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தும் வகையில்

# திமுக தகவல் தொழில்நுட்ப அணி மண்டலங்களில் மாற்றங்கள் செய்யப்பட்டு மண்டல பொறுப்பாளர்கள் நியமனம்!

### தி.மு.க. தொழில்நுட்பச் செயலாளர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா அறிவிப்பு!

மாண்புமிகு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலில் நடைபெறும் "ஓரணியில் தமிழ்நாடு" பரப்புரை திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தும் வகையில் திமுக தகவல் தொழில்நுட்ப அணி மண்டலங்களில் மாற்றங்கள் செய்யப்பட்டு கீழ்க்காணும் வகையில் மண்டல பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

| மண்டல பொறுப்பாளர் | மாவட்டங்கள் |
|---|---|
| திரு.சி.எச். சேகர் (மாநில துணை செயலாளர்) சென்னை மண்டல பொறுப்பாளர் | திருவள்ளூர் கிழக்கு, திருவள்ளூர் மேற்கு, திருவள்ளூர் மத்திய, சென்னை கிழக்கு, சென்னை தெற்கு, சென்னை மேற்கு, சென்னை வடக்கு, சென்னை வடகிழக்கு, சென்னை தென் மேற்கு |
| திரு.டாக்டர். ஏ.கே. தருண் (மாநில துணை செயலாளர்) சேலம் மண்டல பொறுப்பாளர் | தருமபுரி மேற்கு, தருமபுரி கிழக்கு, கள்ளக்குறிச்சி தெற்கு, கள்ளக்குறிச்சி வடக்கு, திருவண்ணாமலை தெற்கு, திருவண்ணாமலை வடக்கு சேலம் மத்திய, சேலம் மேற்கு, சேலம் கிழக்கு. |
| எஸ்.டி.இசை (மாநில துணை செயலாளர்) வேலூர் மண்டல பொறுப்பாளர் | கிருஷ்ணகிரி கிழக்கு, கிருஷ்ணகிரி மேற்கு, திருப்பத்தூர், இராணிப்பேட்டை, வேலூர் |
| நவின் (மாநில துணை செயலாளர்) நெல்லை மண்டல பொறுப்பாளர் | திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி மத்திய, தென்காசி வடக்கு, தென்காசி தெற்கு, கன்னியாகுமரி கிழக்கு, கன்னியாகுமரி மேற்கு. |
| அ.தமிழ்மாறன் (மாநில துணை செயலாளர்) காஞ்சி மண்டல பொறுப்பாளர் | காஞ்சிபுரம் தெற்கு, காஞ்சிபுரம் வடக்கு, விழுப்புரம் மத்திய, விழுப்புரம் வடக்கு, விழுப்புரம் தெற்கு. |
| அ.தமிழ்மறை (மாநில துணைச் செயலாளர்) கோவை மண்டல பொறுப்பாளர் | கோவை மாநகர், கோவை வடக்கு. கோவை தெற்கு, நீலகிரி. |
| பி.கேசவன் (மாநில துணை செயலாளர்) கரூர் மண்டல பொறுப்பாளர் | நாமக்கல் கிழக்கு, நாமக்கல் மேற்கு, திருப்பூர் தெற்கு, திருப்பூர் வடக்கு, திருப்பூர் மத்திய, திருப்பூர் கிழக்கு, ஈரோடு வடக்கு, ஈரோடு தெற்கு, ஈரோடு மத்திய, கரூர் |
| திரு.எம்.விஜய கதிரவன் (மாநில துணை செயலாளர்) முகவை மண்டல பொறுப்பாளர் | இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர் வடக்கு, விருதுநகர் தெற்கு, தூத்துக்குடி வடக்கு, தூத்துக்குடி தெற்கு. |
| பி.எம். ஸ்ரீதரன் (மாநில துணை செயலாளர்) தஞ்சை மண்டல பொறுப்பாளர் | தஞ்சை வடக்கு, தஞ்சை மத்திய, தஞ்சை தெற்கு, திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கடலூர் மேற்கு, கடலூர் கிழக்கு. |
| பாச.பிரபு (மாநில துணை செயலாளர்) மதுரை மண்டல பொறுப்பாளர் | திண்டுக்கல் கிழக்கு, திண்டுக்கல் மேற்கு, மதுரை மாநகர், மதுரை தெற்கு, மதுரை வடக்கு, தேனி தெற்கு, தேனி வடக்கு. |
| ஏ.கே.அருண் (மாவட்ட ஒருங்கிணைப்பாளர்) திருச்சி மண்டல பொறுப்பாளர் | திருச்சி தெற்கு, திருச்சி வடக்கு, திருச்சி மத்திய, பெரம்பலூர், அரியலூர், புதுக்கோட்டை வடக்கு, புதுக்கோட்டை தெற்கு |

**அண்ணா அறிவாலயம்**
சென்னை
நாள் :6.7.2025

**முனைவர் டி.ஆர்.பி.ராஜா**
செயலாளர்
தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி

---

## அமிர்தா விஜயகுமார் தலைமை! செம்பனார்கோயில்–

# திருக்கடையூரில் தெருமுனை பிரச்சாரக் கூட்டம்!

### நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. – நாகராஜன் – அருள்தாஸ் – குமரவேல் சிறப்புரை!

மயிலாடுதுறை, ஜூலை 8-

மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் மத்திய ஒன்றியம் திருக்கடையூரில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாள் விழா மற்றும் திராவிட மாடல் ஆட்சியின் நான்காண்டு சாதனை விளக்ககூட்டம் செம்பனார்கோயில் மத்திய ஒன்றிய திமுக இளைஞரணி சார்பில் நடைபெற்றது. திருமலை பிரச்சாரக் கூட்டத்திற்கு செம்பனார்கோயில் மத்திய ஒன்றிய செயலாளர் அமுர்த விஜயகுமார் தலைமை தாங்கினார்.

மாவட்ட கழக துணை செயலாளர் மு.ஞான வேலன், தகவல்தொழில்நுட்ப அணி மாநில துணை செயலாளர் பி. எம்.ஸ்ரீதர், ஒன்றிய செயலாளர்கள் அப்துல் மாலிக், அன்பழகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் மாரியப்பன் வரவேற்றார். பூம்புகார் சட்டமன்ற உறுப்பினரும் மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளருமான நிவேதா எம். முருகன், தலைமைக் கழக பேச்சாளர்கள் நாகராஜன், அருள்தாஸ், குமரவேல் சிறப்புரை ஆற்றினர். கூட்டத்தில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் மருது, மாவட்ட மீனவர் அணித்தலைவர் மணிமாறன்,


ஒன்றிய துணை செயலாளர் கணேசன் மற்றும் ஒன்றிய கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகி கள், ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்கள், கலந்து கொண்டனர். முடிவில் முன்னாள் ஒன்றிய குழு துணைத்தலைவர் பாஸ்கரன் நன்றி கூறினார்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பொள்ளாச்சி எஸ். ராஜு

**ஜூலை 8 (2014)**



தனது இளமை காலந்தொட்டே கழகத்தில் ஈடுபாடு கொண்டு பொள்ளாச்சி பகுதியில் பணியாற்றியவர்

1972ஆம் ஆண்டு முதல் 2007 ஆண்டு வரை தொடர்ந்து பொள்ளாச்சி நகரச் செயலாளராகவும் பின்னர், தலைமைச் செயற்குழு உறுப்பினராக பொறுப்பு வகித்தவர்.

கழகத்திற்கு சோதனை ஏற்பட்டபோது கொங்கு மண்டலத்தில் கழகத்தை வளர்த்திட பாடுபட்டவர்களில் இவரும் ஒருவர்.

பொள்ளாச்சி நகர்மன்ற உறுப்பினராகவும் – நகர்மன்றத் தலைவராகவும் பொறுப்பு வகித்ததுடன், 1996ஆம் ஆண்டு பொள்ளாச்சி சட்டமன்றத் தொகுதி கழக உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

1959ஆம் ஆண்டு நடைபெற்ற விலைவாசி உயர்வு போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எஸ்.வி. சக்கரை மைதீன்

**ஜூலை 8 (1987)**



தனது இளமை காலந்தொட்டே தந்தை பெரியாரின் கொள்கையை ஏற்று திராவிடர் கழகத்தின் பகுத்தறிவு கொள்கையை பரப்பி வந்த இவர், கழகம் துவங்கியபோதே அதில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

பட்டிதொட்டியெங்கும் கழகக் கொள்கைகளை பிரச்சாரம் செய்த இவர், ஒருங்கிணைந்த கோவை மாவட்டத்தின் வட்டச் செயலாளராக பணியாற்றினாறர்.

இவரது கழகப் பணியினை போற்றும் வண்ணம் கோவையில் நடைபெற்ற மாநாட்டு அரங்கிற்கு இவரது பெயர் வைக்கப்பட்டது.

இந்தி திணிப்பு எதிர்ப்பு, விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றதோடு, மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**